

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 30-10-2024

# அமைதியே சூழ்க

**இந்திய சீன எல்லையில் இருநாட்டுப் படைகளும் தங்களது நாடுகளுக்குள் நகரத் தொடங்கி இருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியே ஆகும். இதன் மூலமாக உலகுக்கு 'அமைதியே சூழ்க' என்று இரு நாடுகளும் சொல்லும் உயரத்தைப் பெற்றுள்ளன. கடந்த நான்காண்டு காலமாக இருந்த மோதல் போக்குக்கு முற்றுப்புள்ளி வைப்பதாக இந்த நகர்வு அமைந்துள்ளது.**

ரஷ்யாவில் நடைபெற்ற பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் இந்தியப் பிரதமர் மோடி அவர்களும், சீன அதிபர் ஷி ஜின் பிங் அவர்களும் நடத்திய பேச்சுவார்த்தையில் எடுக்கப்பட்ட இறுதி முடிவின்படி இந்த நகர்வு நடைபெற்றுள்ளது. ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெற்ற பேச்சுவார்த்தை இது.

கடந்த அக்டோபர் 21 ஆம் நாள் இருநாடுகளுக்கும் ஒரு ஒப்பந்தம் நிறைவேறியது. கிழக்கு லடாக் எல்லையில் டெம்சோக், டெப்சாங் சமவெளி பகுதியில் இருந்து படைகளை விலக்கிக் கொள்வது என இரு நாடுகளும் ஒப்புக் கொண்டது. இந்த ஒப்பந்தத்தின்படி இரு நாட்டு படைகளாலும் அமைக்கப்பட்டுள்ள கூடாரங்களை அகற்ற வேண்டும். ராணுவக் கருவிகளையும், பொருட்களையும் அங்கிருந்து பின்புறமாக எடுத்துச் செல்ல வேண்டும். மோதலைத் தவிர்க்க இருநாட்டு ராணுவ வீரர்களும் கூட்டாக கண்காணிப்புப் பணிகளைச் செய்ய வேண்டும். அதனடிப்படையில் அக்டோபர் 25 முதல் படைகளை விலக்கிக் கொள்ளத் தொடங்கி இருக்கிறார்கள்.

2014 முதல் இந்திய எல்லைக்குள் சீன ஊடுருவல் அதிகமாகி வந்தது. ஒரு பக்கம் பேச்சுவார்த்தைகளை நடத்திக் கொண்டே இன்னொரு பக்கம் இதுபோன்ற செயல்களும் நடைபெற்று வந்தன. கடந்த பத்தாண்டுகளில் 18 முறை இருநாடுகளுக்கும் நேரடிப் பேச்சுவார்த்தை நடைபெற்றும் உள்ளது. அதே நேரத்தில் மோதலும் தொடர்ந்தது.

2020 ஆம் ஆண்டு நடைபெற்ற மோதலில் இந்திய தரப்பில் 20 வீரர்களும், சீன தரப்பில் 40 வீரர்களும் பலியானவர்கள். கிழக்கு லடாக்கில் கல்வான் பள்ளத்தாக்கில் இந்த மோதல் நடைபெற்றது. இதில் இருந்து இரு நாடுகளும் எல்லைப் பகுதியில் ராணுவ வீரர்களைக் குவித்து வந்தது. சீன நாட்டு செயலிகளுக்கு இந்தியா தடை விதித்தது.

**கடந்த ஏப்ரல் மாதம் அருணாச்சல பிரதேசத்தில் 30 இடங்களுக்கு சீன மொழியில் பெயர்கள் வைத்து அதிர்ச்சியைக் கொடுத்தது சீனா.**

**2017 ஆம் ஆண்டு 6 பகுதிகளுக்கும்,**

**2021 ஆம் ஆண்டு 15 பகுதிகளுக்கும்,**

**2023 ஆம் ஆண்டு 11 பகுதிகளுக்கும்,**

**2024 ஆம் ஆண்டு 30**

**பகுதிகளுக்கு பெயர் வைத்தது சீனா.**

அருணாசலப் பிரதேசத்துக்கு சீன நாடு வைத்துள்ள பெயர் 'ஷாங்னான்' என்பது ஆகும். தெற்கு திபெத்தின் ஒரு பகுதி இது என்றும், சீனாவின் ஒருங்கிணைந்த பகுதி என்றும் சீனா உரிமை கொண்டாடி வருகிறது. **"சீனாவின் பகுதிகளுக்கு உரிமைகள் கோருதல் மற்றும் இறையாண்மை உரிமைகளுக்கு தீங்கு விளைவிக்கும் நோக்கத்தில் அந்நிய நாட்டு மொழிகளில் உள்ள இடங்களின் பெயர்கள் நேரடியாக மேற்கோள் காட்டப்படவோ அல்லது அங்கீகாரமின்றி மொழிபெயர்க்கப் படவோ கூடாது"** என்பது சீனாவின் அரசியலமைப்புச் சட்டத்தின் 13 ஆவது பிரிவாம். அந்தப் பிரிவின்படி இந்த பெயர் மாற்றத்தை அந்த நாடு செய்ததாம்.

அப்போது இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் கூலாக சொன்ன பதில் என்ன தெரியுமா? **"உங்கள் வீட்டுக்கு நான் பெயரை மாற்றுவதன் மூலம், அது எனக்குச் சொந்தமாகி விடுமா? இந்த மாநில இடங்களுக்கு பெயரை மாற்றுவதன் மூலம் எதுவும் நடந்துவிடாது"** என்று சொன்னார்.

அதேநேரத்தில் இந்திய - சீன பேச்சுவார்த்தையும் மறுமுனையில் நடைபெற்று வந்தது. பாங்காங் ஏரியின் வடக்கு, தெற்குப் பகுதியில் தங்கி இருந்த படைகள் 2021 ஆம் ஆண்டு விலக்கிக் கொள்ளப்பட்டன. கோக்ரா பகுதியில் இருந்த படைகள் 2022 ஆம் ஆண்டு விலக்கிக் கொள்ளப்பட்டன. இப்போது கிழக்கு லடாக்கில் படை விலக்கல் நடந்துள்ளது. இதன்பிறகு எல்லையில் போர் பதற்றம் தணியும் என்று இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் சொல்லி இருக்கிறார்.

இந்திய - சீன எல்லைப் பகுதியில் அமைதி திரும்புவதற்கான முதல் நடவடிக்கையாக இதனை பார்க்க வேண்டும். எல்லையில் பதற்றம் தணியும். இதன் பிறகு எல்லைகளை எவ்வாறு நிர்வகிப்பது என்பது குறித்து விவாதிக்கப்படும் என்று அமைச்சர் ஜெய்சங்கர் சொல்லி இருக்கிறார். இந்தப் பேச்சு மீண்டும் மோதலுக்கு வழிவகுப்பதாக அமையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். 'பரந்த மனத்துடன் கருத்தொற்றுமை ஏற்பட்டுள்ளது' என்று பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் சொல்லி இருக்கிறார். அதனை செயல்வடிவத்தில் நாம் பார்க்கவேண்டும்.

**2020ஆம் ஆண்டுக்கு முந்தைய சூழலை உருவாக்க வேண்டும். எல்லையில் அமைதிக்கு முன்னுரிமை அளிக்க இருநாட்டுத் தலைவர்களும் ஒப்புக் கொண்டுள்ளார்கள். அதை செயல்படுத்திக் காட்ட வேண்டும்.**

## தமிழகத்தில் நாளை கனமழைக்கு வாய்ப்பு!

### வானிலை ஆய்வு மையம் கணிப்பு!

*சென்னை , அக். 30 -*

*தென்னிந்திய கிழக்கு கடலோரப் பகுதிகளை ஒட்டி ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.*

*இதனால், தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.*

*தென்தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், வடதமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.*

*திண்டுக்கல், தேனி, தென்காசி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.*

*தீபாவளி அக். 31ஆம் தேதி மற்றும் நவம்பர் 1ஆம் தேதி ஆகிய இரு தினங்களும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*நவம்பர் 1ஆம் தேதி தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.*

*ஈரோடு, கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், திருப்பத்தூர், நாமக்கல், திருச்சி, தேனி, திண்டுக்கல், மதுரை மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.*

*இவ்வாறு வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*



முதலமைச்சர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை அவரது முகாம் அலுவலகத்தில் லண்டன் மாநகரில் சட்ட மேற்படிப்பை வெற்றிகரமாக முடித்து வந்துள்ள வழக்கறிஞரும், தி.மு.க. தலைமை நிலையச் செயலாளர் பூச்சி எஸ்.முருகன் புதல்வருமான எஸ்.எம்.சிவசூரியன் தனது 25 வது பிறந்தநாளை முன்னிட்டு நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள - நாகப்பட்டினத்தைச் சேர்ந்த

## 12 மீனவர்களையும் - மீன் பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட நடவடிக்கை எடுத்திடுவீர்!

### ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சரை வலியுறுத்தி – முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

சென்னை, அக். 30 -

நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த 12 மீனவர்கள் 26.10.2024 அன்று மீன்பிடிக்கச் சென்றிருந்தபோது, இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், அவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கருக்கு 27.10.2024 அன்று கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், இந்திய மீனவர்கள் இலங்கை அதிகாரிகளால் தொடர்ந்து இதுபோன்று கைது செய்யப்படும்சம்பவங்களைச்சுட்டிக்காட்டியுள்ள முதலமைச்சர் அவர்கள், இத்தகைய கைது நடவடிக்கைகள், இந்தியா - இலங்கை இடையிலேயான ஆக்கபூர்வமான தூதரக முயற்சிகளுக்கு அழைப்பு விடுக்கும் ஒரு முக்கியப் பிரச்சினையாக மாறியுள்ளதாகவும், மீனவர்கள் இதுபோன்று கைது செய்யப்படுவது, இந்தியாவில், குறிப்பாக தமிழ்நாட்டில் உள்ள மீனவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் வாழ்வாதாரம் மற்றும் பாதுகாப்பிற்குக் கடுமையான அச்சுறுத்தலைத் தொடர்ந்து ஏற்படுத்தி வருவதாக வும் குறிப்பிட்டுள்ளார்.

நாகப்பட்டினத்தைச் சேர்ந்த 12 மீனவர்கள் கடந்த 26-10-2024 அன்று IND-TN-06-MM-5102 என்ற பதிவெண் கொண்ட படகில் மீன் பிடிக்கச் சென்றிருந்த நிலையில், இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், 2024 ஆம் ஆண்டில் மட்டும் இதுபோன்று 30 சம்பவங்கள் நடந்துள்ளன என்றும், 27.10.2024 அன்றைய நிலவரப்படி 140 மீனவர்கள் மற்றும் 200 மீன்பிடிப் படகுகள் இலங்கை அரசு வசம் உள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

எனவே, இந்தப் பிரச்சினையை முன்னுரிமை அடிப்படையில் எடுத்துச் சென்று, இலங்கை அரசால் கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட உரிய நடவடிக்கை எடுக்குமாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

### எழும்பூர், ராதாகிருஷ்ணபுரத்தில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆய்வு!

சென்னை, அக். 30–

எழும்பூர், ராதாகிருஷ்ண புரத்தில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய திட்டப் பகுதியை இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு கட்டிமுடிக்கப்பட்ட நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய 168 வீடுகளை நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு பொது மக்களின் கோரிக்கையை கேட்டறிந்தார்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி நேற்று முன்தினம் (28.10.2024) எழும்பூர் சட்டமன்றத் தொகுதி, 99வது வார்டு, ராதாகிருஷ்ணபுரத்தில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய திட்டப் பகுதியை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு பொதுமக்களின் கோரிக்கை களை கேட்டறிந்தார்.

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் சட்ட மன்றத் தொகுதி வார்டு 99க்கு உட்பட்ட நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய ராதாகிருஷ்ணபுரம் திட்டப்பகுதியில் இருந்த குடிசை மாற்று வாரிய குடியிருப்பு 2020ல் இடிக்கப்பட்டு கிடப்பில் போடப்பட்டிருந்த கட்டுமானப் பணிகளை கழக ஆட்சி அமைந்தவுடன் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு இக்குடியிருப்பின் கட்டுமான பணிகள் தாமதமாவதால் குடியிருந்தோர் படும் வேதனைகளை எடுத்து சொல்லி கட்டுமானப்பணிகளை துரிதப்படுத்தியதன் காரணமாக கட்டிமுடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு தயாராக உள்ள 168 வீடுகளுக்கு 28.10.2024 அன்று நேரில் சென்றுஆய்வு மேற்கொண்டு பொதுமக்களின் கோரிக்கையை கேட்டறிந்தார்.

இந்நிகழ்வில் எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சொ.வேலு, 99வது வார்டு மாநகராட்சி மன்ற உறுப்பினர் பரிதி இளம்சுருதி, 99–வது வட்டக் கழகச் செயலாளர் ஆ.ரம்.ரங்கநாதன், ராம் முரளி, செபாஸ்டியன், சுகுமார், புரசை ரவி, சண்முகம், ரசாக் மற்றும் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய உதவி செயற்பொறியாளர் மதிவேலன், திட்டப்பகுதி பொறியாளர் பிளம்மிங் பிரகாஷ், 99வது கோட்டம் பொறியாளர் கே.சிவகுமார், மின் துறை பொறியாளர் கே.கந்தன் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

"தென்னகத்து போஸ்" ஐயா பசும்பொன் திருமகனார் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் தீரத்தையும், தியாகத்தையும், நற்பணிகளையும் நன்றியோடு நினைவுகூர்கிறேன் !

மு.க.ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்
அவர்களின்
117ஆவது பிறந்த நாள் மற்றும் குரு பூஜை



நாள் : 30.10.2024, புதன்கிழமை, காலை 9.30 மணி
இடம் : பசும்பொன், இராமநாதபுரம் மாவட்டம்

தமிழ்நாடு அரசின் சார்பில்
பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்
அவர்களின் நினைவிடத்தில்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
மற்றும்
மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்,
உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,
சீர்மிகு பெருமக்கள் மாலை அணிவித்து
மரியாதை செலுத்துவார்கள்.

நாள் : 30.10.2024, புதன்கிழமை, காலை 9.30 மணி
இடம் : நந்தனம் சந்திப்பு, அண்ணா சாலை, சென்னை

தமிழ்நாடு அரசின் சார்பில்
அன்னாரது திருவுருவச் சிலைக்கு

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற,
சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர்,
உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,
சீர்மிகு பெருமக்கள்
மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.

செ.ம.தொ.இ./1100/வரைகலை/2024

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, சென்னை–600 009